




# நகர் ஊரமைப்புத்துறை (DTCP)
# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஈரோடு மாவட்டம்
# சிறுகளஞ்சி ஊராட்சி

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், சிறுகளஞ்சி ஊராட்சி மற்றும் கிராமம், ரீ.ச.எண்.137/2A1-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.
(திட்டமில்லா பகுதி)

அளவு : 1" அங்குலம் = 33"0"அடி (அ) (1:400)
இணையதள விண்ணப்ப எண் : UEI7WXF4 நாள் : 18.01.2025

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு : 1.07¾ ஏக்கர் (அ) 4358.14 ச.மீ
ஒதுக்கிய மனைகள் : 14
மனைப்பிரிவின் எல்லை ..........

நிலையிலுள்ள சாலை/அணுகு சாலை..........

<u>பொது ஒதுக்கீடுகள் : (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டியவை)</u>
I. மனைப்பிரிவு சாலை பரப்பு : 835.83 ச.மீ
II. பூங்கா :

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (4358.14 - 835.83 ) x ( 10/100) = 352.23 ச.மீ
ii) ஒதுக்கப்பட்ட பூங்கா பரப்பு : 360.00 ச.மீ(10.22%) மனுதாரரால் பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பீட்டு தொகை செலுத்தப்பட்டுள்ளது.
iii) <u>பொது உபயோகம்</u>

A)LOCAL BODY-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (4358.14 - 835.83) x (0.50/100) = 17.61 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 19.59 ச.மீ (0.56%)

B)TANGEDCO-க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (4358.14 - 835.83) x (0.50/100) = 17.61 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 17.86 ச.மீ (0.51%)

சாலைகள், பொது உபயோகம்(A) மற்றும் TANGEDCO (B) பரப்பு ஆவண எண்:1015/2025 நாள்:03.03.2025-ன்படி உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

<u>கட்டிட வரம்பு:</u> 9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.
9.0மீ முதல் 18.0மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ-ம் விடப்படல் வேண்டும்.
<u>மூலை முடக்கு:</u> 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ விடப்படல் வேண்டும்.
12.0மீ-க்கு மேல் 30.5மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5மீ x 4.5மீ விடப்படல் வேண்டும்.

<u>நிபந்தனைகள்</u>

1. அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 04.02.2019,மற்றும் அரசாணை எண் : 16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள்,பூங்கா மற்றும LOCAL BODY ஒதுக்கீட்டினை உள்ளாட்சியும் மற்றும் TANGEDCO ஒதுகீட்டினை TANGEDCO அல்லது உள்ளாட்சியும் தானமாகப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண்:181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள:09.12.2020-ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழை நீர்வடிகால் வசதி, மேல்நிலை தொட்டி,தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதி மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதிசெய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண்:141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவுக்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நிலஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் என்றும் சிறுகளஞ்சி ஊராட்சிக்காக சென்னிமலை தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதில் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்விதமுன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர். சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைகுண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம/ஆணையின் நகல் நகல் மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத்துறை சட்டபூர்வமாக தொழில் நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி, திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில்(கிரயப்பத்திரம் - குத்தகை பத்திரம் பட்டா- தானபத்திரம் - பொது அதிகார பத்திரம் )மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துகொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'x4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவு சாலைகளக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு (BDO/UE) செயல் அலுவலர் / யூனியன் பொறியாளர்/ நகராட்சி பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
10. பிரஸ்தாப மனைப்பிரிவுக்கு இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
11. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.
12. மனைப்பிரிவினை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமையும் வகையில் சுற்றுச்சுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
13. மனைப்பிரிவின் ஊடே (அ) அருகில் வாய்க்கால், நீர்நிலைகள் இருப்பின் புல வரைபடத்தின் படி நிலை நிறுத்தப்பட வேண்டும்.
14. மனைப்பிரிவின் ஊடே குறைந்த/அதிக மின்னழுத்த கம்பிப்பாதை செல்வதால் மேற்படி கம்பிப்பாதை சாலையின் போக்கிற்கு ஏற்ப மனுதாரர் தமது சொந்த செலவில் மாற்றியமைக்கப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
15. அணுகுசாலையில் அமைந்துள்ள மின்மாற்றியினை உத்தேச சாலைக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் மனுதாரர் தமது சொந்த செலவில் மாற்றியமைக்கப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
16. மனைபிரிவிற்கு RERA அனுமதி பெற்ற பின்னரே மனைகளை விற்பனை செய்ய வேண்டும்.

**SWP/DTCP/ERODE /LAYOUT APPROVAL NO: 69/2025**

| | |
|---|---|
| அளவர் / உதவி வரைவாளர் | [signature] |
| வரைவாளர் நிலை-III | [signature] |
| கட்டிடக்கலை/ திட்ட உதவியாளர் | [signature] |

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Erode
Date:2025.03.13 08:58:38

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
ஈரோடு மாவட்டம்